1978 மார்ச் 1]

* 338 வினா.—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முன்னாள் ராணுவ வீரர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பொருள் போக்குவரத்துக் கழகத்தில் இப்போழுது எத்தனை முன்னாள் ராணுவத்தினர் பணியாற்றுகிறார்கள் ?

(ஆ) முன்னாள் ராணுவ வீரர்கள் அல்லாதார் எத்தனை பேர் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மற்றும் (ஆ): 1977ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதிய நிலவரப்படி பொருள் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் 247 பேரில், 203 பேர் முன்னாள் இராணுவத்தினர்; 44 பேர் முன்னாள் இராணுவத்தினர் அல்லாதவர்கள். இக் கழகம் முன்னாள் இராணுவத்தினருக்காக மட்டுமே அமைக்கப் பட்டது என்று இதன் அமைப்பு விதிமுறைகளிலோ அல்லது அர சாங்க உத்தரவிலோ கூறப்படவில்லை

திரு. சோ. அழகர்சாமி : முன்னாள் ராணுவத்தினருக்காக மட்டும் இல்லை என்று சொன்னாலும், அதில் வேலைவாய்ப்பு அவர் களுக்கு அளிக்கும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டாலும் இந்தப்போக்குவரத்துக் கழகத்தில் அவர்கள் பலபேர் மனுப் போட்டுஅவர்களுக்கு அங்கே வேலை இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக் கிறது. அவர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் அவர் களுக்கு ஒரு முன்னுரிமை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இனி மேலாவது அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: முன்னாள் ராணுவத்தினர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்ற நிலை இல்லை. மாறாக 13–7–1977 அன்று அந்தப் பொருள் போக்குவரத்துக் கழகத் துக்கு முன்னாள் ராணுவத்தினர் மனுப்போட்டார்கள். அதன் படி நேர்முகத் தேர்விற்கு 50 பேர்கள் அழைக்கப்பட்டும் இரண்டு பேர்கள்தான் வந்தார்கள். அந்த இரண்டு பேர்களும் எடுத் துக்கொள்ளப்பட்டார்கள். அதுபோல 16–8–1977 அன்று 50 முன்னாள் ராணுவத்தினர் அழைக்கப்பட்டு அவர்களிலும் இரண்டு பேர்கள்தான் இறுதியாக வந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் துறைமுகம்.

* 339 வினா.—திரு. எஸ். கணேசன், திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகப்பட்டினம் துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்த அரசு உத்தேசித் துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?